பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கபாடி விளையாட்டைக் கட்டாயமாக்கும் திட்டம்.

*வினா எண். 205—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சடுகுடு (கபாடி) விளையாட்டை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கட்டாயமாக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(ஆ) சடுகுடு விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) பள்ளியளவில் கட்டாயமாகப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கல்வித் திட்டத்தில் கபாடி விளையாட்டும் ஒன்றாகும் ஆனால் கல்லூரிகளில் உடற்பயிற்சிக் கல்வி (கபாடி விளையாட்டு உட்பட) கட்டாயபாடமாக்கப்படவில்லை.

(ஆ) சடுகுடு விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களின் கல்விச் செலவை அரசு ஏற்றுக் கொள்வதற்கான திட்டம் ஏதுமில்லை.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டானது பழந்தமிழர் விளையாட்டாகும். அதுவும் இப்படி விளையாடும்போது தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தாமல் விளையாடுகின்றனர். ஆகவே இனிமேலாவது சடுகுடு விளையாட்டில் தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தவேண்டும் என்று அரசு தக்க உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் இந்த கபாடி என்ற பெயர் இருந்து வருகிறது. நாம் சடுகுடு என்று சொல்லிக்கொண்டு இருப்பதிலே எந்தவிதமான தடையும் இல்லை. ஆனால் அகில இந்திய அளவிலே போகும்போது அந்தப் பெயரைத்தான் மற்றவர்களுக்காக ஏற்றுக் கொள்ளவேண்டும்,

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டை தினத்தந்தி பத்திரிகையின் உரிமையாளர் மறைந்த பெரியவர் ஆதித்தனார் அவர்கள் தொடங்கி தமிழகம் பூராவும் ஊக்கம் கொடுத்து விட்டார்கள். ஆகவே அவருடைய பெயரிலே ஒரு கேடயத்தை உருவாக்கி, சிறந்த சடுகுடு விளையாட்டு வீரர்களுக்கு இந்த கேடயத்தை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே. அது பற்றித் தனியாகக் கேள்வி கேட்கவும்.

1982 பிப்ரவரி 15]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத், தலைவர் அவர்களே, இந்தச் சடுகுடு, கபாடி விளையாட்டு விளையாடுபவர்கள் மாணவர்கள் என்றுதான் இருக்கிறது. இது பெண்களாலும் விளையாடப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாணவர்கள் என்றால் மாணவிகளும் அதிலே இருக்கிறார்கள்.

திரு மி. வின்சென்ட். பேரவைத் தலைவர் அவர்களே, மாநில விளையாட்டுகளில் கலந்து கொண்டு வெற்றிபெறுகின்ற முதல் மாணவர்க்கு ரூ. 600 ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவதாக அறிவிப்பு வந்ததே அது உண்மையா? அத்தகைய ஊக்க உதவித் தொகை இந்தச் சடுகுடு விளையாட்டு வீரர்களுக்கும் பொருந்துமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெறுகின்ற பள்ளிகளுக்கு வழங்கிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் மாணவர்கள் என்ற குறையில் 1980-81-ல் சென்னை, கோவை? அண்ணாமலை நகர் ஆகிய 3 இடங்களிலும் விளையாட்டுப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறோம். திருச்சி, மதுரை, திருநெல்வேலி, ஆகிய இடங்களில் விளையாட்டு விடுதிகளை ஆரம்பித்திருக்கிறோம். அந்த இடங்களில் இருக்கின்ற மாணவர்களுக்கு நாம் தங்குகின்ற வசதியும், உணவும் தந்து, சிறப்புப் பயிற்சியும் நாம் தருகிறோம். அதே நேரத்தில் கல்வியையும் அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு தி. க. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டு நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகிற காரணத்தாலும், அதிகமாக விளையாட்டு வீரர்கள் ஊக்கம் செலுத்துகின்ற காரணத்தினாலும். உலக அரங்குகளில் இந்த விளையாட்டை விளையாடுவதற்கு மாநில அரசே மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது இந்தக் கபாடி என்று சொல்லப்படுகிற சடுகுடு விளையாட்டுக்காக அரசு நல்ல ஆதரவு தந்து கொண்டிருக்கிறது. அண்மையில் கூட கோவையிலே அகில இந்தியப் பெண்களும் ஆண்களும் சேர்ந்து மிகப்பெரிய அளவிற்கு அளவிற்கு விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. இன்னும் 4, 5 மாதங்களில் இன்னும் ஒரு போட்டி தமிழ்நாட்டிலே நடைபெற இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அளவுக்கு இந்த விளையாட்டுக்கு தமிழ்நாடு அரசு சிறந்த ஆதரவு தந்து கொண்டிருக்கிறது. உலக அளவிலே இந்தப் போட்டி நடைபெற வலியுறுத்த வேண்டும் என்று சொன்னார்கள் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-30]

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சடுகுடு விளையாட்டில் 'குடு குடு' என்று மூச்சை அடக்கி கொண்டு கூறிவருவதுபோல், 'உடன்குடி வெத்திலையை, பறிச்சுட்டான், பிடிச்சுட்டான், விட்டுட்டான், என்று பாடிக் கொண்டே நெல்லை மாவட்டத்தில் உள்ளவர்கள் விளையாடுகி றார்கள். நாம் தற்போது பாரதிவிழாவைக் கொண்டாடிக் கொண்டு வருகின்றநேரத்தில், அவர் நினைவாக அவர் பாடிய

''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை....'

என்று சொல்லிக்கொண்டு 'சடுகுடு' ஆடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விளையாட்டில் மூச்சைப்பிடித்துக்கொண்டு விளையாடவேண்டும் என்பது தான் அதிலே உள்ள மிக முக்கிய மான அடிப்படையாகும். மூச்சைப்பிடித்துக்கொண்டு தான் விளையாடுகிறானா என்று தெரிந்து கொள்வதற்குத்தான் 'சடுகுடு' என்று சொல்லிக் கொண்டு விளையாடுகிறார்கள். அதற்கு ஏற்ற வகையில் வேறு என்ன வார்த்தைகள் சொன்னால் பொருத்தமாக இருக்குமோ அதைச் சொல்லிக் கொண்டும் விளையாடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாரதியார் பாடலைப் பற்றிச்சொன்னார்கள். விளையாடுகின்றவர்களுக்கு அது பொருத்தமாக இருந்தால் பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்கு நாம் ஒன்றும் தடை விதிக்கப்போவது இல்லை. ஆனால் கவிதை பாடிக் கொண்டு விளையாட்டிலே தோற்று விடக் கூடாது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Facilities for learning Sanskrit

*Q. No.206—THIRU S. RAJARAMAN; Will the Hon. the Minister for Education be Pleased to state;—

(a) weather the State Government has been asked by that Centre about the facilities given in this state for the study of Sanskrit (b) if so, the details thereof

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) தமிழ் நாடு கல்விக் கூடங்களில் சமஸ்கிருத படிப்பிற்கு அளிக்கப் படும் ஊக்கம் குறித்து லோக் சபையில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கத் தேவையான விவரங்களை மைய அரசு கேட்டது. தமிழ்நாட்டில் பின்பற்றிவரும் இருமொழித்திட்டத்தின்படி தமிழ் அல்லது தாய்மொழியுடன் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. இவைகளைத் தவிர மூன்றாவது மொழி படிக்க இடமில்லை என்றும், சமஸ்கிருதம் தமிழ் நாட்டிலுள்ள 22 ஓரியண்டல் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருகிறது என்றும், இவைகளில் படிக்கும் மாணவர்கள் உதிவித்தொகை பெறுகின்றனர் என்றும் மைய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.